
பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்
பாடம் 3 அக்டோபர் 17, 2026



«அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து தெக்கொவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான்."»

(2 நாளாகமம் 20:20)

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், மற்றவர்களுக்கு தெரிவிப்பதற்காக தேவனிடமிருந்து செய்திகளை பெற்றவர்கள் “தீர்க்கதரிசிகள்” என்று அழைக்கப்பட்டனர் (1 சாமு. 9:9).

மறைவானவற்றையும், ஏன் இனி நிகழவிருப்பவற்றையும்கூட அறியும் ஆற்றல் அவர்களிடம் இருந்தது (1 சாமு. 9:6), ஆனால் அவர்களின் பணி இதோடு மட்டும் நின்றுவிடவில்லை, அது இன்னும் பலவற்றையும் உள்ளடக்கியிருந்தது. இந்த ஆற்றல் அவர்களிடமிருந்து வந்ததல்ல, மாறாக அது தேவனிடமிருந்து வந்ததாகும்.

“தாங்கள் யூகித்த தரிசனத்தை” சொல்லுகிற கள்ள தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள்(எரே. 23:16).





- தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் யார்?
- தீர்க்கதரிசிகள் எவ்வாறு நடந்துகொண்டார்கள்?
- தீர்க்கதரிசிகள் என்ன ஊழியப்பணி செய்தார்கள்?
- எந்த பெண்கள் தீர்க்கதரிசன வரம் பெற்றிருந்தார்கள்?
- கள்ள தீர்க்கதரிசிகளிடம் என்னென்ன பண்புகள் இருந்தன?

# தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் யார்?

"எலியா என்பவன் நம்மைப் போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை." (யாக்கோபு 5:17)

தீர்க்கதரிசிகள் "அசாதாரண மனிதர்கள்" என்று நம்பும் தவறை நாம் செய்துவிடக்கூடும். ஆனால், மோசேயோ தமக்கு திக்குவாய் இருந்ததால் அப்பணியை ஏற்க தயங்கினார் (யாத். 4:10); ஏசாயாவோ தமக்கு அசுத்த உதடுகள் இருந்ததாகக் கூறினார் (ஏசா. 6:5); எரேமியாவோ அப்பணியை செய்வதற்கு தாம் மிகவும் இளையவர் என்று கருதினார் (எரே. 1:6).





அறமற்ற செயல்களுக்காக ஆகாப் அரசனைப் பெரும் வறட்சி ஏற்படும் என்று அச்சுறுத்தும் துணிச்சலைக் கொண்ட எலியா: "நம்மைப் போலப் பாடுள்ள மனுஷன்" (யாக் 5:17).




ஒரு பெரிய அற்புதத்தை செய்தபிறகு, இராணி யேசபேல் விடுத்த மரண அச்சுறுத்தலால் எலியா முற்றிலும் சோர்ந்து போனார் (1 இராஜா 19:2-4).

தேவன் தமது தீர்க்கதரிசிகளை அவர்கள் பரிபூரணமானவர்கள் என்பதற்காக தேர்ந்தெடுப்பதில்லை என்பது தெளிவாகிறது. அவர்களிடம் அவர் காண்பது என்ன? தேவன் மீதான அவர்களின் அன்பும், அவருக்கு கீழ்ப்படியும் மனவிருப்பமுமே.



# தீர்க்கதரிசிகள் எவ்வாறு நடந்துகொண்டார்கள்?

**"அதற்கு மிகாயா: கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்."** (1 இராஜாக்கள் 22:14)





தேவனுடைய செய்தித்தொடர்பாளர்களாக, ஆண் தீர்க்கதரிசிகளும் பெண் தீர்க்கதரிசிகளும் தங்கள் அழைப்பிற்கு ஏற்றவாறு வாழ முயன்றனர் (1 சாமு. 12:3-4). மக்கள் அவர்களை "தேவனுடைய மனுஷன்", "பெரியவர்"என்றும் அறிந்திருந்தனர் (1 சாமு. 9:6) அவர்களுடைய செய்தியை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் அவர்களை வெறுத்து அச்சுறுத்தினார்கள் (1 இராஜா 22:8, 27). ஆனால், தாங்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும், தீர்க்கதரிசிகள் தங்கள் செய்தியை உண்மையுடன் அறிவித்தார்கள்.

மிகாயா, இரண்டு இராஜாக்கள், அவர்களுக்கு சாதகமாக செய்தியை அறிவித்த 400 தீர்க்கதரிசிகள் மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப நடந்துகொள்ளுமாறு அவனுக்கு அறிவுறுத்திய ஒரு காவலர், ஆகியோருக்கு முன்பாக தோன்றினார். (1 இராஜா 22:10-13). இருப்பினும், அவர் உறுதியாக நின்று, தேவன் அவருக்கு வெளிப்படுத்தியதை தவிர வேறு எதையும் கூற மறுத்துவிட்டார் (1 இராஜா 22:14).

அவர்கள் பூரணமானவர்களாக இருக்கவில்லை, ஆயினும், அவர்கள் ஜெபத்தில் நிலைத்திருந்த ஆண்களும் பெண்களுமாகவும், இறைவார்த்தையில் உண்மையுள்ளவர்களாகவும், தேவனுக்கும் மக்களுக்கும் ஊழியம் செய்தவர்களாகவும் திகழ்ந்தனர் (1 சாமு. 12:23; எரே. 42:4).





# தீர்க்கதரிசிகள் என்ன ஊழியப்பணி செய்தார்கள்?

"பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரன் எலிசாவை உன் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு." (1 இராஜாக்கள் 19:16)

மற்றவற்றுடன், தீர்க்கதரிசிகள் இப்பணிகளை செய்தனர்:









## இராஜாக்களுடன்

- இராஜாக்களை இவர்கள் அபிஷேகம் செய்தார்கள் (1 இராஜா 19:16)
- இராஜாக்கள் நன்மை செய்தபோது இவர்கள் அவர்களை ஊக்குவித்தார்கள் (2நாளா. 15:8)
- இராஜாக்கள் தவறு செய்தபோது, அவர்களை இவர்கள் எதிர்கொண்டனர் (1 இராஜா 21:20)

## ஆசாரியர்களுடன்

- ஆசாரியர்கள் தவறு செய்தபோது, இவர்கள் அவர்களை எதிர்கொண்டனர் (மல். 2:1-2)

## மக்களுடன்

- மக்களுக்கு தேவனுடைய வழிகளை இவர்கள் கற்றுக் கொடுத்தனர் (மீகா 6:8)
- மக்கள் தங்கள் பாவத்தை இவர்களிடம் தெரிவித்தார்கள் (ஏசா. 58:1)
- இவர்கள் மக்களை மனந்திரும்புதலுக்கு அழைத்தார்கள் (எசே 18:32)

## நம்முடன்

- இவர்கள் நமக்கு தங்கள் செய்திகளை எழுத்துப்பூர்வமாக அமைத்தனர் (2நாளா. 13:22)

# எந்த பெண்கள் தீர்க்கதரிசன வரம் பெற்றிருந்தார்கள்?

"அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்."
(நியாயதிபதிகள் 4:4)

பழைய ஏற்பாடு ஐந்து பெண் தீர்க்கதரிசிகளைக் குறிப்பிடுகிறது. அவர்களில் ஒருவரான நோவதியாள் ஒரு பொய் தீர்க்கதரிசியாக இருந்தாள் (நெகே. 6:14). மற்றொருவரான ஏசாயாவின் மனைவியை பொறுத்தவரை, அவருக்கு தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் இருந்ததாலேயே அவர் "பெண் தீர்க்கதரிசி" என்று அழைக்கப்பட்டாரா, அல்லது தீர்க்கதரிசியின் மனைவியாக இருந்ததால் அவ்வாறு அழைப்பட்டாரா என்பது நமக்கு தெரியாது (ஏசா. 8:3).









**மீரியாம்.** ஒரு பெண் தீர்க்கதரிசியாக, செங்கடலை கடந்த பிறகு அவர் பெண்களை வழிநடத்திப் பாடல்களை பாடினார். மேலும், பாலைவனப் பயணத்தின் போது மக்களை வழிநடத்துவதில் தன் சகோதரர்களுக்கும் அவர் உதவினார் (யாத். 15:20; மீகா. 6:4).

**தெபோராள்.** அவர் தீர்க்கதரிசி மற்றும் நியாயாதிபதி ஆகிய இரு பதிவிகளை வகித்ததுடன், பாராக்குடன் சேர்ந்து சிசெராவுக்கு எதிரான போரில் மக்களை வழிநடத்தினார். வெற்றிக்கு பிறகு, அவர் ஒரு தீர்க்கதரிசன துதிப் பாடலை பாடினார் (நியாய 4:4-9; 5:1).

**உல்தாள்.** கண்டெடுக்கப்பட்ட நியாயப்பிரமாண புஸ்தகத்தை குறித்து யோசியா அவரிடம் ஆலோசனை கேட்டார். மன்னரின் கேள்விக்கு பதிலளித்ததோடு மட்டுமல்லாமல், அவருக்கு ஊக்கமளிக்கும் வார்த்தைகளையும் அவர் கூறினார் (2 இராஜா 22:14-20).

# கள்ளதீர்க்கதரிசிகளிடம் என்னென்ன பண்புகள் இருந்தன?

"அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக்கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினதுமில்லை; அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும், இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்."
(எரேமியா 14:14)



தீர்க்கதரிசனம் உரைத்த எல்லாரும் தேவனிடமிருந்து செய்தி பெற்றதாலேயே அவ்வாறு செய்யவில்லை(எரே. 14:14). அவர்களின் செய்தி என்ன, அதை ஏன் அவர்கள் தெரிவித்தார்கள்?

அவர்கள் தங்களுக்கான தீர்க்கதரிசனங்களை உருவாக்கி கொண்டனர் (எசே. 13:2, 17)

மக்கள் எதை கேட்க விரும்பினார்களோ அதையே அவர்கள் சொன்னார்கள் (எசே 13:16)

அவர்கள் பாவத்திற்கு எதிராக பேசவில்லை (எசே 13:22)

அவர்கள் தங்கள் சுயலாபத்தை தேடினார்கள் (எசே 13:19)

உண்மைக்கு மாறானது என்று தெரிந்திருந்தும், ஒருவர் ஏன் தேவனுடைய சார்பாக பேசுவதாக கூறவேண்டும்? இது தன்னைதானே ஏமாற்றிக்கொள்ளும் செயலா? அல்லது அங்கிகாரம், பணம் மற்றும் பிற ஆதாயங்களை பெறும் விருப்பமா?



கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்த மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், அவர்களுக்கு செவிசாய்த்து அவர்களை பின்தொடரும் மக்கள் இருப்பதுதான். அவர்கள் கூறுவது எந்த முயற்சியும் தேவைப்படாததாகவும், மனசாட்சியை உறுத்தாதாகவும் இருப்பதால் மக்கள் அதை விரும்புகிறார்கள். ஆனால், அவர்களின் வழியை பின்பற்றுவது மரணத்திற்கே இட்டு செல்லும்.

உண்மையான தீர்க்கதரிசி எப்போதும் பாவத்தினால் ஏற்படும் ஆபத்துக்களை பற்றி எச்சரிப்பதுடன், விளைவுகள் எதுவாக இருந்தாலும் மக்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க ஊக்குவிக்கிறார்

“அப்போஸ்தலர்களோ அல்லது தீர்க்கதரிசிகளோ தாங்கள் பாவமற்றவர்கள் என்று ஒருபோதும் உரிமை கோரியதில்லை. கடவுளுக்கு மிகவும் நெருக்கமாக வாழ்ந்தவர்கள், தெரிந்தே ஒரு தவறைச் செய்வதை விடத் தங்கள் உயிரையே தியாகம் செய்யத் துணிந்தவர்கள், தெய்வீக ஒளியாலும் வல்லமையாலும் கடவுளால் கனம் பண்ணப்பட்டவர்கள் ஆகியோரே தங்கள் இயல்பில் உள்ள பாவத்தன்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மாம்சத்தின் மீது நம்பிக்கை வைக்கவில்லை; தங்களுக்குச் சொந்தமான நீதியை உரிமை கோரவில்லை; மாறாக, கிறிஸ்துவின் நீதியின் மீதே முழுமையாக நம்பிக்கை வைத்தார்கள்.”

எலன் ஜி உவைட் (அப்போஸ்தலருடைய நடபடிகள், பக். 561)

# பின்னிணைப்பு: எலன் ஜி உவைட்டின் தீர்க்கதரிசன அழைப்பு

தனது முதல் தரிசனத்திற்குப் பிறகு, தீர்க்கதரிசன ஊழியத்தை நிறைவேற்றத் தான் போதிய அளவு தயாராக இல்லை என்று எலன் உணர்ந்தார். உடல்நலக்குறைவு மற்றும் குறைந்த கல்வியறிவு காரணமாக, 17 வயதான அவர், தமக்கு அளிக்கப்பட்ட அந்த அழைப்பை நிறைவேற்றத் தகுதியற்றவராகவும் இயலாதவராகவும் உணர்ந்தார்.




தனது முதல் தரிசனத்திற்கு ஒரு வாரம் கழித்து, அவருக்கு இரண்டாவது தரிசனம் கிடைத்தது; அதில் அவர் எதிர்கொள்ளவிருக்கும் சவால்கள் குறித்து அவருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மிகுந்த ஜெபத்திற்குப் பிறகும், சக விசுவாசிகளின் ஊக்கத்தாலும், எலன் இறுதியாகத் தனது அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

இருபது ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில், பல தரிசனங்களைப் பெற்றதோடு தனது கணவர் ஜேம்ஸ் வைட்டின் ஆதரவையும் கொண்டு, செவன்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபையின் (இது 1863-இல் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது) அடித்தளத்தை உருவாக்க அவர் உதவினார்.




அட்வென்டிஸ்ட் சுகாதார மற்றும் கல்வி அமைப்புகளை நிறுவுவதில் அவரது பணி முக்கிய பங்காற்றியது; அத்துடன், உலகம் முழுவதும் தெய்வீக வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து வழங்கும் சுமார் 1,00,000 பக்கங்கள் கொண்ட இறை-உந்துதல் பெற்ற எழுத்துக்களையும் அவர் விட்டுச் சென்றுள்ளார்.

